இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 19.08.2026

# ஒரு விளம்பரத்தில் 18 ஓட்டைகள்!

நூறு நாள் ஆண்டு விட்டாராம் முதலமைச்சர் விஜய். அதைக் கொண்டாட அனைத்து நாளிதழ்களிலும் முழுப் பக்க விளம்பரங்கள். இங்கே பார்த்தால் போதாது என்று கர்நாடகம் வரைக்கும் விளம்பரங்கள்.

18 சாதனைகளை அடுக்கி இருக்கிறார்கள். பதினெட்டும் ஓட்டைகள்.

1. சிங்கப் பெண் அதிரடிப்படை என்பது தி.மு.க. ஆட்சியில் செயல்பட்ட பிங்க் பேட்ரோல் (Pink Patrol) தான். அந்தத் திட்டத்தை ஸ்டிக்கர் ஒட்டி சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை என மாற்றினார்கள். இந்த படைக்காக புதிதாக காவலர்களை எடுக்காமல் ஏற்கெனவே உள்ள காவலர்களை இந்த படையில் சேர்த்து மறுபெயர் இட்டிருக்கிறார்கள்.

2. போதைப் பொருளை ஒடுக்குவதற்கான சிறப்பு அதிரடிப்படையும் கடந்த தி.மு.க. ஆட்சியில் இருந்தது தான். தமிழ்நாட்டில் போதைப் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்க திராவிட மாடல் அரசால் கொண்டு வரப்பட்ட திட்டம், 'போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு' என்ற திட்டமாகும். இத்திட்டம் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் நாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால தொடங்கி வைக்கப்பட்டது. இதையே இவர்களும் அறிவித்திருக்கிறார்கள்.

3. மின் கட்டணத்தில் 200 யூனிட் வரை கட்டணமில்லை என்ற அறிவிப்பு மிகமிக மோசடியானது. இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு 200 யூனிட் வரை மின்சாரத்துக்குக் கட்டணமில்லை என்று அரசாணை வெளியிட்டார் விஜய். ஆனால் தேர்தலுக்கு முன்னதாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தகுதி வாய்ந்த வீடுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. தேர்தல் அறிக்கையில் சொன்னது வேறு. வெற்றி பெற்றதற்கு பிறகு செய்தது வேறு.

4. பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தில் பரிசு என்று சொல்லப்பட்டது. இப்போது அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே என்று சுருக்கப்பட்டு விட்டது. நேற்றைய தினம் வெளியான கொள்கை விளக்கக் குறிப்பில் இந்தத் திட்டமே இடம்பெறவில்லை.

5. திருமணம் ஆகும் மணமக்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணத்தை வைத்து ஆண்டுக்கு 60 ஆயிரத்துக்கும் குறைவானவர்களுக்குத் தான் சீர்வரிசை செய்ய முடியும். நாட்டில் நடக்கும் மொத்த திருமணங்கள் எவ்வளவு?

6. பெருந்தலைவர் காலை உணவுத் திட்ட விரிவாக்கம் என்பது திராவிட மாடல் ஆட்சியின் திட்டத்துக்கு பெயர் மாற்றியது மட்டுமே.

**7. நூறு நாளில் 1 லட்சம் கோடி முதலீடு வந்தது என்பதை அமைச்சர் கீர்த்தனாவே இன்னொரு முறை வெளியில் சொல்ல மாட்டார். ஊடகங்களை உள்ளே விடாமல் பூட்டிய ஹோட்டலுக்குள் எதற்காக உலகளாவிய ஒப்பந்தங்கள் போட வேண்டும்?**

8. கரும்பு ஒன்றுக்கு ஊக்கத்தொகை வழங்க தி.மு.க. ஆட்சியை விடக் குறைவான நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. உழவர்களில் 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருப்போர் அனைவருக்கும் பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லி விட்டு இப்போது ஏமாற்றி வருகிறார் விஜய். நாடு முழுவதும் உழவர்கள் போராடி வருகிறார்கள்.**

**10. மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட மதுபானக் கடைகளில் பெரும்பாலானவை திறந்து இருக்கின்றன. விஜய் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இருந்ததை விட பார்களின் எண்ணிக்கை அதிகம் ஆகி இருக்கிறது.**

11. 'கலைஞர் வீடு கட்டும் திட்டம்' வெற்றி வீடு கட்டும் திட்டமாக ஆகி இருக்கிறது.

12. 'உலகம் உங்கள் கையில்' என திராவிட மாடல் ஆட்சியில் தரப்பட்ட கணினிகள், வெற்றி மடிகணினிகள் ஆகி இருக்கிறது.

13. திராவிட மாடல் ஆட்சியின் 'நான் முதல்வன்' திட்டம் 'வெற்றி திறன் பயிற்சித்' திட்டம் ஆகி இருக்கிறது.

14. நூறு நாள் வேலை வாய்ப்பே கிடைக்காத போது 150 வேலை வாய்ப்பை கொடுத்து விட்டாராம்.

**15. தமிழ்நாட்டில் மாணவ, மாணவியருக்கு சைக்கிள் கொடுக்க ஆரம்பித்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டது. மக்கள் காதில் சைக்கிள் செயினை சுற்றுகிறார் விஜய். சைக்கிளில் வாட்டர் பாட்டில் மாட்டப் போகிறாராம். சைக்கிளில் வீல் இருக்கும், பெல் இருக்கும் என்று சொல்ல வேண்டியது தானே?**

16. அனைத்து ஆட்சியிலும் சுகாதாரத்துக்கும், குடிநீருக்கும் சாலைகள் போடவும் பணம் ஒதுக்கத்தான் செய்வார்கள். இதில் என்ன புதுமை?

**17. ஆடுகளுக்கு 'வெற்றி ஆடுகள்' என்று பெயர் சூட்டி இருக்கிறார் விஜய். இது அந்த ஆடுகளுக்குத் தெரியுமா எனத் தெரியவில்லை. மகளிருக்கு ஆடுகள் கொடுக்கும் திட்டம் 2011 முதல் நடைமுறையில் இருக்கிறது.**

**18. வெளிப்படையான நிர்வாகமாம். ஊழல் இல்லையாம். ஜூனியர் விகடன், நக்கீரன் இதழ்களைப் பார்க்கவில்லையா முதலமைச்சர்? குறைந்தது மூன்று மாதத்தில் இரண்டு இதழ்களிலும் 10 அட்டைப்படக் கட்டுரைகளாவது ஊழலைப் பற்றி வந்திருக்கும். 'துக்ளக்' இதழும் ஊழல்கள் பற்றி எழுதி இருக்கிறது. 'ஆடியோ ஆதாரம் இருக்கிறது' என்கிறார் அண்ணாமலை. 'ஊழல் செய்யக் கூடாது' என்று அமைச்சரவைக் கூட்டத்தில் முதலமைச்சர் எச்சரித்ததாக த.வெ.க. செய்தி துறையே செய்தி பரப்புகிறது. ஊழல் நடப்பதால்தானே முதலமைச்சர் பேசுகிறார்?**

இப்படி விஜய் படத்தோடு வெளியிட்ட ஒற்றை விளம்பரத்தில் மொத்தமும் ஓட்டைகள். நூறு நாளில் இத்தனை ஓட்டைகளை வைத்துக் கொண்டு யுகத்துக்கான மக்களின் மனச்சாட்சியாம். யுகம் என்ற சொல்லுக்கும், மனச்சாட்சிக்கும் அர்த்தம் தெரியாதவர்களின் ஆட்சி இது.

## 151 சூப்பர் ஸ்பெஷாலிட்டி

# மருத்துவ இடங்கள் மீண்டும் கிடைக்குமா?

## சட்டப்பேரவையில் – எ.வ.வேலு கேள்வி!

**சென்னை, ஆக. 19 - சட்டப்பேரவையில் பேசிய முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு 151 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ இடங்கள் மீண்டும் கிடைக்குமா? என கேள்வி எழுப்பினார்.**

17.08.2026 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் எ.வ.வேலு பேசியதாவது:-



பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோவை அமுதன் கொலை, கர்நாடகத்தில் மூன்று தமிழர்கள் கொலை செய்யப்பட்டிருப்பது, திருவொற்றியூரில் தனுஷ்குமார் கொல்லப்பட்டிருப்பது, தேனி மாவட்டத்தில் மேகமலை சம்பந்தப்பட்டது, சென்னையில் 400 சதவிகிதம் சொத்து வரி ஏற்றம் குறித்தது, மின் கட்டணம் மற்றும் மின் துண்டிப்பு பற்றியது இப்படி ஐந்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈரப்புத் தீர்மானத்தை தங்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். அவைகளையெல்லாம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளலாம். ஏனென்றால் இப்போது கேள்வி நேரம் இல்லாத காரணத்தினால், இந்த ஐந்தையும் அவசரநிலை கருதி இன்றைக்கு எடுத்துக்கொண்டால் சிறப்பாக இருக்கும்.

இந்த மாமன்றத்தில் நீங்கள் மூத்த உறுப்பினராக இருந்துதான் பேரவைத் தலைவராக வந்திருக்கிறீர்கள். விதிகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். கேள்வி நேரத்திலும் சரி, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்று நீங்கள் கொடுத்த விதி புத்தகத்தில் இருக்கிறது. எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு அரசினுடைய கவனத்திற்கு இந்தந்த சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று கவனத்திற்குத்தான் கொண்டு வருகிறார்கள்.

ஆனால், ஒன்றேயொன்று; குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்று விதி புத்தகத்திலிருந்துதான் சொல்கிறேன். அவர் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார். காவல் துறையில் நாங்கள் ஒரு கேள்வி கேட்டால், அப்போது அமைச்சர் அவர்கள் பதில்கூட சொல்லலாம். ஆனால், கவன ஈர்ப்புத் தீர்மானத்திலோ அல்லது ஒத்திவைப்பு தீர்மானத்திலோ நாங்கள் கேட்கிற கேள்விக்கு அரசு விளக்கம்தான் தர வேண்டும். நீங்கள் சொல்கிறீர்கள். அதற்கு எதிர் குற்றச்சாட்டு சொல்கிறோம் என்று சொல்வது இதுவரையில் விதி மரபுகள் அல்ல. அதை நீங்கள் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித் துறை அமைச்சர் சொல்லியதற்கு எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்வார்.

### அவசரத் தீர்மானம்!

பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் 3 தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற ஓர் அவசரத் தீர்மானத்தை காலையில் கொடுத்தேன். ஏனென்றால், அது முக்கியமானது ஆகையால் இன்றைக்கு நீங்கள் எடுத்துக்கொள்வதுதான் நல்லது.

ஏற்கெனவே ruling இருக்கிறது. இதேபோன்று பலமுறை அமைச்சர்கள் பெயரை, முதலமைச்சர் பெயரை சொல்கின்ற அடிப்படையில் அம்மையார் காலத்தில் இருந்தே, இரண்டு பக்கத்திலும் பல பிரச்சினைகள் வந்தபிறகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு முடிவு எடுத்தார்கள். அதாவது, இன்றைய முதலமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர். ஏற்கெனவே இருந்தவர்களை முன்னாள் முதலமைச்சர் என்றுதான் சட்டமன்றத்தில் குறிப்பிட வேண்டும். பெயரைச் சொல்லக்கூடாது என்று ஏற்கெனவே இங்கு ruling இருக்கிறது. அதனால் அதைக் கடைப்பிடித்தால் இந்த பிரச்சினைகள் பாதி அடங்கிவிடும். அதனால், மரியாதைக் குறைவு இல்லாமல் இந்த சட்டமன்றம் நடக்க வேண்டும். அதனால் அமைச்சர் பெயரைச் சொல்லும்போது கூட மாண்புமிகு துறை அமைச்சர் என்று சொல்லலாம். அதுவும் குறிப்பாக, முதலமைச்சரை விளிக்கிறபொழுதும் சரி, முன்னாள் முதலமைச்சரை விளிக்கிறபொழுது முன்னாள் முதலமைச்சர் என்றுதான் விளிக்க வேண்டுமென்று ruling இருக்கிறது. அதனால், அதுபோன்று கடைபிடித்தால்தான் ஒன்று. இன்னொன்று, ஏற்கெனவே என்னவென்று கேட்டீர்களென்றால், ஏதாவது, அவசரம் கருதி உடனேயே அமைச்சர்கள் பதில் சொல்லலாம்,

இல்லையென்றால் அமைச்சர்கள் கடைசியில் பேசுவதற்கு அவர்களைப் பொறுத்தவரையில் நிறைய வாய்ப்பு உண்டு. நேரத்தின் அருமை கருதி நான் சொல்கிறேன். எல்லாவற்றிற்கும் எழுந்து நின்று அப்போதைக்கப்போது பதில் சொல்ல வேண்டுமென்று நினைத்தால் உங்களால் நேரம் கொடுக்க முடியாது. அதையும் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்.

### உச்சநீதிமன்றத் தீர்ப்பு!

மாநில அரசினுடைய மருத்துவ இடங்களில் ஒன்றிய அரசுக்கு 15 சதவிகிதம் நாம் வழங்குகிறோம். 15 சதவிகிதம் வழங்கிவிட்ட பின்பு, ஒன்றிய அரசாங்கத்திலிருந்து 27 சதவிகிதங்களை மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்க வேண்டும் என்ற அந்த அடிப்படையிலும், ஏற்கெனவே doctors அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 50 சதவிகிதம் நமக்கு மீண்டும் தர வேண்டுமென்று உச்சநீதிமன்றத்திலே எங்களுடைய தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வழக்குத் தொடர்ந்து, அவைகளையெல்லாம் கொடுக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் என்றுதான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அந்த அடிப்படையில், ஏறத்தாழ 151 super speciality என்று சொல்லப்படுகிற அந்த இடம் நமக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. இப்போது, உச்ச நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கிறது என்றால், 151 super speciality என்பது மாநில அரசாங்கத்திற்கு இல்லை, ஒன்றிய அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று Supreme Court ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. எனவே, மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மீண்டும் 151 super speciality என்கிற அந்த மருத்துவ இடம் நமக்கு வருவதற்காக, நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற மருத்துவர்கள் அதாவது அரசு மருத்துவமனையிலே பணியாற்றுகிற மருத்துவர்கள் super speciality பயிற்சி பெறுவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் பதிலுரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். நாங்கள் அனைவரும் பொறுமையாக அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். போகிறபோக்கில், ஏற்கெனவே இருந்த அரசாங்கம் நிர்வாகத் திறமை அற்றது, நாங்கள் நிர்வாகம் நன்றாகச் செய்கிறோம் என்று சொல்வதைப் பற்றியெல்லாம், அதுதான் பொதுவான கருத்துகள். சில அரசாங்கத்தில் leakage இருக்கும். நாங்கள் leakage என்றுகூட பேசுங்கள் அல்லது நாங்கள் திறமையானவர்கள் என்று உங்களைப் பாராட்டிக் கொள்ளுங்கள். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்தும் இல்லை. முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறார்கள், அதெல்லாம் உங்களுடைய உரிமை. அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. நீங்கள் ஏற்கெனவே Ruling கொடுத்திருக்கிறீர்கள். என்று எதைச் சொன்னாலும் சரி, அதற்கு ஆதாரம் இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் குறிப்பிட வேண்டுமென்று, நீங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள், உங்களுடைய Ruling. இது ஒன்று.

### வளர்ச்சிக்கு காரணம் திராவிட இயக்கம்!

அது இல்லாமல், இந்த நாடு இன்றைக்கு வளர்ச்சி பெற்றதற்குக் காரணம் திராவிட இயக்கம்தான். இன்றைக்கு நாம் அனைவரும் படித்திருக்கிறோம் என்று சொன்னால், அதற்குக் காரணம் திராவிட இயக்கம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்கள்தான் கூறினார், நான் கிராமத்தில் எங்கோ பிறந்து வளர்ந்தேன், எங்கோ சென்று, கிருஷ்ணகிரியில் ஒரு கிராமத்தில் சென்று மருத்துவராக நான் வந்தேன் என்று சொன்னால், இந்த மருத்துவம் சாதாரண கிராமத்தில் இருப்பவர்களும் படிப்பதற்கு வாய்ப்புத் தந்தது திராவிட இயக்கம்தான். திராவிட இயக்கம் இல்லையென்றால் நான் பேசியிருக்க முடியாது. யாரும் படித்திருக்க முடியாது.

எனவே, திராவிட இயக்கத்தை நீங்கள் புதிதாக வந்திருக்கிறீர்கள், கொள்கையைச் சொல்லுங்கள். மீண்டும் நாங்கள்தான் ஆட்சிக்கு வருவோம் என்று சொல்லுங்கள். 25 ஆண்டுகாலம் கட்டமைத்தோம் என்று சொல்லுங்கள் அது உங்களுடைய உரிமை. ஆனால், அடுத்தவர்களைப் பேசுகிறபொழுது, அடுத்தவர்களை கை நீட்டுகிற பொழுது, ஆதாரம் இல்லாமல் பேச வேண்டாம் என்று நீங்கள் தயவுசெய்து Ruling கொடுங்கள். இல்லையென்றால், இந்த 25 நாட்களும் இதே பிரச்சினைதான் வரும். சட்டசபையை நாம் நடத்த முடியாது.

இவ்வாறு எ.வ.வேலு பேசினார்.

## த.வெ.க. ஆட்சியில்

# அதிகாரிகளிடம் மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை!

## நெல்லை மாவட்ட அலுவலகத்தில் மனுக்களை கொட்டி விவசாயிகள் போராட்டம்!

*நெல்லை, ஆக.19 - உரங்கள் விலையை குறைக்கக் கோரியும், பாதிப்படைந்த உளுந்து பயிருக்கு உரிய இழப்பீடு வழங்கக் கேட்டும் விவசாயிகள் நேற்று அதிகாரிகளிடம் அளித்த மனுக்களை நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக வாசலில் கொட்டி போராட்டம் நடத்தினர்.*

*தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் முன்னேற்ற சங்க நிறுவனத் தலைவர் மூவி சுந்தர் தலைமையில் விவசாயிகள் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:-*

*மானூர் வட்டம் வன்னிகோனேந்தல் குறுவட்ட பகுதியில் 2025 - 26ஆம் ஆண்டு நாங்கள் உளுந்து பயிரிட்டோம். மழை காரணமாக அப்பயிர்கள் முழுமையாக பாதிப்படைந்த நிலையில் விவசாயிகள் பொருளாதார இழப்பை எதிர் கொண்டனர். பாதிப்படைந்த பயிர்களை வேளாண்மை துறை, வருவாய்த்துறை மற்றும் புள்ளியல் துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்தனர். ஆய்வின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை மற்றும் பயிர்க் காப்பீட்டு தொகை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.*

*மேலும் மானூர் வட்டாரத்தின் மையப் பகுதியாக விளங்கும் அழகிய பாண்டிய புரம் பகுதியில் தனி பத்திரப்பதிவு அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு மாவட்ட செயலாளர் கானார்பட்டி ஆபிரகாம் தலைமையில் விவசாயிகள் தாங்கள் ஏற்கனவே அளித்த பல்வேறு மனுக்களுக்கு இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லாததை கண்டித்து ஆட்சியர் அலுவலக வாசலில் மனுக்களை கொட்டி போராட்டம் நடத்தினர்.*

*பின்னர் அவர்கள் அளித்த மற்றொரு மனுவில் கூறியிருப்பதாவது,*

*நெல்லை மாவட்டத்தில் உரம், பூச்சி மருந்து விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ உரத்தின் விலை ரூபாய் 20 வரை உயர்த்துள்ளது. உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் ஒன்றிய, மாநில அரசுகள் உரத்தின் விலையை குறைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லையெனில் விவசாயிகளுக்கு மாற்றுத் தொழில் தொடங்க ஆவண செய்ய வேண்டும்.*

*இவ்வாறு அவர்கள் கூட்டாக மனுவில் கூறியுள்ளனர்.*

## அமைச்சர்களின் செயல்பாடுகள்

# முதல்வர் பதவிக்கே அவமானத்தைத் தேடித் தரும் கொடுமை!

## திண்டுக்கல் லியோனி கண்டனம்!

*சென்னை, ஆக. 19 - "அமைச்சர்களின் செயல்பாடுகள் முதல்வரின் பதவிக்கே அவமானத்தைத் தேடித் தரும் கொடுமை" என்று தமிழ்நாடு பாடநூல் கழக முன்னாள் தலைவர் திண்டுக்கல் லியோனி கூறியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-*



*சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்த சட்டத்துறை அமைச்சர், வனத்துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சர் ஆகியோரின் பதில்கள் பொய்யாகவும், வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்தது மிகவும் வெட்கக்கேடானது.*

*முதலமைச்சர் விஜய் மன்னிப்புக் கேட்கும்படியும், அவர் அவைக்கு வரும்போது யாரும் எழுந்து நிற்க வேண்டிய அவசியமில்லை என்றும் பேரவையில் சபாநாயகரே அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது மிகப் பெரிய அவலம்.*

*அமைச்சர்களின் பேச்சும் செயல்பாடுகளும் முதலமைச்சருக்குப் பெருமை சேர்ப்பதற்குப் பதிலாக, அவரது பதவிக்கே அவமானத்தைத் தேடித் தருகின்றன. "அனுபவம் தவறுகளைத் திருத்திக் கொள்ளும்; ஆணவம் தவறுகளை நியாயப்படுத்தும்".*

*இவ்வாறு திண்டுக்கல் லியோனி தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.*